வெள்ளி விழா ஆண்டு

அக்டோபர்2021

# கொலம்பஸ் தமிழ் சாரல்

## இலையுதிர் கால இதழ்








FCBank
A DIVISION OF CNB BANK

# உள்ளடக்கம்


தலையங்கம்……………………………………………………......2

சதுரங்கச் சிறுத்தை……………………………………………......4

துளிபா(ஐக்கூ) …………………………………………………......7

தங்கமகன் நீரஜ் சோப்ரா………………………………………...8

தண்ணீர் தேசம் - புத்தக விமர்சனம்……………………………10

சமைக்க, ருசிக்க………………….……………..............................13

சித்திரம் ……………………….……………………………………14

நற்தமிழ்ச் சங்கத்திற்கு நன்றி…………………………………....17

இலையும் சருகும்………………………………………………....19

கொலம்பஸ் தமிழ்ச் சங்க செய்திகள்…………………………....27

‘வே’ என்ற ஒற்றைத் தமிழெழுத்து……………………………....30

வெங்காயமும் தர்பூசணியும்……………………………………...31

விடைகள்……………………………………………………….....33

தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு…………….................................35

சாரல் குழு……………………………………………………….....36

சரிபார்த்தோர் குழு………………………………………………....37

## தலையங்கம்

தமிழ் சொந்தங்களுக்கு வணக்கம்!!!!

புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் கொலம்பஸ் தமிழ்ச் சங்க செயற்குழுவிற்கு நல்வாழ்த்துகள்!!!!

கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் வெள்ளி விழா ஆண்டை கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த பெரிய மைல்கல்லை அடைய உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் சிரம் தாழ்ந்த நன்றி.

நம் முன்னோர்கள் நமக்கு சொல்லித் தந்த மிக முக்கியமான விஷயங்களில் திட்டமிடுதலும் ஒன்று. நம்மில் பலரும் எதையும் திட்டமிட்டு செய்து பழகி விட்டோம். திட்டத்தில் சிறிய தடை ஏற்பட்டாலும் மனம் கலங்கி விடுகிறோம், அந்த ஏமாற்றத்தை தாங்க முடியாமல் வருத்தப்படுகிறோம். திட்டமிட்டு செயல்படுவது மிகவும் நல்லதே... திட்டப்படி அனைத்தும் நடந்து விட்டால் மிகவும் மகிழ்ச்சி. ஆனால் திட்டப்படி தான் எப்போதும் நடக்கும் என்று கிடையாது. அப்படி நடக்கவில்லை என்றால் நம் முன் பல வாய்ப்புகள் இருக்கின்றது, முயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் எதுவும் சாத்தியம்.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

-திருக்குறள்

சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் யாராவது 'நம்மில் பலர் வீட்டில் இருந்தபடியே வேலை செய்யப் போகிறோம், பிள்ளைகள் வீட்டில் இருந்தபடியே நிகழ்நிலைக் கல்வி கற்கப் போகிறார்கள்' என்றால் நம்பி இருப்போமா? நாம் நம் சூழ்நிலை மற்றும் தேவைக்கு ஏற்றாற்போல் திட்டங்கள் போட்டிருப்போம், ஆனால் அதெல்லாம் ஒன்றும் இல்லாமல் போனது. படிப்படியாக நம்மை தகவமைத்து புதிய வாழ்க்கை முறைக்கு உட்படுத்திக் கொண்டோம். இது நமக்கு சாத்தியப்படுத்தியது 'நம்மால் முடியும் என்ற நம்பிக்கையும், விடாமுயற்சியும்' இருந்ததினால் தான்.

திட்டங்கள் கைவிடலாம், ஆனால் தன்னம்பிக்கை என்றும் கைவிடுவதில்லை. முடியாது என்றால் மூடத்தனம்!

முடியுமா என்றால் கோழைத்தனம்
முடியும் என்பதுதான் மூலதனம்!

- பெயர் தெரியாத கவிஞன்.

நம் அடுத்த தலைமுறைக்கு உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை போன்ற நற்பண்புகளுடன் இனிமையான தமிழ் மொழியையும் கற்று தருவோம்.

முயல்வோம்.... உழைப்போம்.... எதுவும் நம்மால் முடியும்....

அன்புடன்



பத்மா முத்துக்குமார்

சாரல் ஆசிரியர்குழு

## சதுரங்கச் சிறுத்தை



**-கிஷோர் குமார்**

ஆசிய அளவில் நடைபெறும் சதுரங்கப் போட்டியில் பங்கேற்க மோட்டார் சைக்கிளில் சீறிப்பாயும் வேகத்தில் சென்ற செந்தில்நாதன் சாலை விபத்தில் சிக்கினான். தானும் ஒரு விஸ்வநாதன் ஆனந்த் போல வர வேண்டும் எனும் அவனது பல வருடக் கனவை அந்த விபத்து முடக்கிப் போட்டது. முதுகுத்தண்டு, கழுத்து ஆகிய முக்கிய இடங்களில் அடிபட்டு, மார்புப் பகுதியில் இருந்து கால், பாதம் வரை தன் உணர்ச்சிகளை இழந்தான். சுயமாக எந்த வேலையும் செய்ய முடியாத நிலையில், மருத்துவமனையில் தன் பெற்றோர் தன்னை நன்றாக கவனித்து கொண்டாலும் செந்தில்நாதன் தன்னை மனதளவில் தனிமைப்படுத்திக் கொண்டான்.

எந்நேரமும் ஏதோ ஒரு சிந்தனையில் தனக்குள்ளே பேசிக்கொண்டிருந்தான். ஆயிரம் கேள்விகள் - ஏன்? எப்படி? எதற்காக இப்படி நடந்தது? ஏன் என்னை மட்டும் இப்படி இறைவன் சோதிக்க வேண்டும், இதுபோல பல கேள்விகள் இருப்பினும் ஒன்றுக்கும் விடையில்லை.

செந்தில்நாதன், அவன் தந்தை ரங்கநாதனுக்கு ஒரே மகன். திருமணம் ஆகி 7 ஆண்டுகள் கழித்துப் பிறந்தவன். தவமிருந்து பெற்ற பிள்ளை உடல் பாகத்தில் உணர்விழந்து, தன்னைத் தனிமைப்படுத்தி வாழ்வது கண்டு எந்தத் தகப்பனுக்குத்தான் மனம் ஆறும்... தனக்குப் பிள்ளை இல்லை என்ற போது எந்த அளவுக்கு இறைவனிடம் வேண்டுதல் வைத்தாரோ அதே அளவிற்குத் தன் குழந்தையை மீட்க வேண்டுதலை வைத்தார். தாய் தன் பிள்ளையை விட்டு நகராமல் அவனைக் கவனித்துக் கொள்ள, தகப்பனோ தன் பிள்ளைக்காக இறைவனிடம் கையேந்திப் பிரார்த்தனைகள் செய்து வந்தார்.

செந்தில்நாதனுக்கு சிரித்த ஒளிவட்டமான முகம், இப்போது அதில் சிரிப்பும் இல்லை, ஒளியும் இல்லை. இறைவனிடம் தினம் தினம் பிரார்த்தனைகள் முடித்து செந்தில்நாதனைப் பார்க்க ஓடி வரும் தந்தை எதிர்பார்ப்பதெல்லாம் செந்தில்நாதன் முகத்தில் ஒரு அழகிய சிரிப்பைத் தான். ஏதேதோ செய்தும் செந்தில்நாதனின் பழைய புன்னகையைக் காணவில்லை.



செந்தில்நாதன் மேல் அளவுக்கதிகமான அன்பு இருந்தும் அவனுக்குப் பிடித்த ஒரு விஷயம் அவன் தந்தை ரங்கநாதனுக்குப் பிடிக்காது. அது சதுரங்கம் ஆடுவது. விபத்து நடந்த நாளில் கூட செந்தில்நாதனைத் திட்டித் தான் அனுப்பி வைத்தார். அதனால் செந்தில்நாதனின் மன உளைச்சலுக்குத் தானும் ஒரு காரணம் என்ற குற்ற உணர்வு ரங்கநாதனுக்கு இருந்தது. மேலும், தன் பிள்ளை பழையபடி சரியாக வேண்டும் என்ற எண்ணமும் மேலோங்கியது. எனவே ரங்கநாதன் இறுதியில் ஒரு முடிவு எடுத்தார். ரங்கநாதன் தானும் சதுரங்கம் ஆட ஆரம்பித்தார். தினமும் தன் மகனைப்

பார்க்கும் போதெல்லாம் கையில் சதுரங்க போர்டுடன் தான் இருப்பார். எனக்கும் சதுரங்கம் ஆட ஆசையா இருக்கு, எனக்கு சொல்லிக்கொடுப்பா என்று தன் மகனிடம் சதுரங்கத்தைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். மருத்துவர்கள் கொடுத்த பயிற்சியும், முயற்சியும் செந்தில்நாதன் உடலுக்குப் பக்கபலமாக இருந்தது. அதற்கு ஈடாக ரங்கநாதன் செந்தில்நாதனுடன் ஆடிய சதுரங்கம் செந்தில்நாதனுக்கு மனதைரியத்தைத் தந்தது.

தன் கவலைகளை மறந்து புன்னகையுடன், புத்துணர்ச்சியுடன் நடைப்பயிற்சி மேற்கொண்டான். ஒரே சமயத்தில் தன் மூளைக்கும் உடலுக்கும் வேலை கொடுக்கத் தொடங்கினான். மெல்ல மெல்ல அவனுக்கு உணர்ச்சிகளும் வரத் தொடங்கின. மருத்துவமனையில் இருந்து ஓரளவு குணமடைந்து தன் வீட்டிற்குத் திரும்பும் சில நாட்களுக்கு முன் மருத்துவமனையில் உலக ஊனமுற்றோர் தினத்தைக் கொண்டாடும் விதமாகப் பல்வேறு போட்டிகள் மாற்றுத்திறனாளிகளுக்கு வைக்கப்பட்டது. அதில் சதுரங்கப் போட்டியில் தானாகவே வந்து பங்கேற்றான் செந்தில்நாதன். இந்த செய்தி தந்தை ரங்கநாதனுக்கு மிகுந்த ஆனந்தத்தைக் கொடுத்தது.

பங்கேற்ற போட்டிகளில் ஒன்றில் கூடத் தோற்காமல் வெற்றிகரமாக இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றான் செந்தில்நாதன் . செந்திநாதன் போலவே எந்த போட்டியிலும் தோற்காமல் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய பாலாஜியுடன் இறுதிப் போட்டி தொடங்க சில நிமிடங்கள் தான் இருந்தது.

பரபரப்பான இந்தப் போட்டியைக் காண மருத்துவமனையே போட்டி நடைபெறும் அறையை சுற்றி வளைத்தது. இறுதிப்போட்டி மூன்று படிகளாக மாற்றப்பட்டது. அதில் இரண்டு போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குத் தான் கோப்பை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதில் முதல் போட்டி இரண்டு நிமிடங்கள், இரண்டாவது போட்டி ஒன்றரை நிமிடங்கள், மூன்றாவது போட்டி ஒரே ஒரு நிமிடம், அதற்குள்ளாகவே வெற்றி பெறும் வாய்ப்பு யாருக்கு அதிகம் தென்படுகிறதோ அவர்களே வெற்றியாளர் என்று அறிவிக்கப்படுவர்.

இறுதிப்போட்டிகள் ஆரம்பித்தன... முதல் போட்டியை ஒன்றரை நிமிடத்திலும், இரண்டாவது போட்டியை ஒரு நிமிடத்திலும், மூன்றாவது போட்டியை 40 நொடிகளிலும் முடித்து, தொடர்ந்து மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று கோப்பையை வென்றான் செந்தில்நாதன்.

மீண்டும் ஆசிய அளவிலான போட்டியில் பங்கேற்க மகிழ்ச்சியுடன் தன்னை தயார்படுத்திக் கொள்ள ஆயத்தமானான். இறுதிப்போட்டியில் சிறுத்தை வேகத்தில் ஆட்டத்தை முடித்ததால் அவன் திறமைக்கு மரியாதை செலுத்தும் விதமாக செந்தில்நாதனுக்கு சதுரங்கச் சிறுத்தை என்ற பட்டப் பெயர் சூட்டினர்.

சில மாதங்களிலேயே மருத்துவமனையை விட்டு வெளியே வந்த செந்தில்நாதன், அவன் தந்தை ரங்கநாதன் உறுதுணையுடன் சொந்தமாக ஒரு சதுரங்கப் பயிற்சிக்கூடம் உருவாக்கினான்.


Procurement
GSA Schedule
DevCare Solutions
DevCare Solutions is a full service IT Solutions Firm based in Columbus, Ohio, specializing in IT Solutions, IT Staffing and IT Project Services. The IT solutions that we offer are completely customizable,versatile, flexible, intuitive, and designed to meet individual business needs.
MBE CERTIFIED
WBENC
Microsoft CERTIFIED
aws partner network
ivanti
* TOP PERFORMING VENDOR UNDER THE FOLLOWING STATE STAFF AUG PROGRAMS: MICHIGAN / OHIO / PENNSYLVANIA
* TOP 5 PERFORMING VENDOR in 16 OTHER STATE STAFF AUG PROGRAMS
* CRM SOLUTIONS - SALESFORCE & MS DYNAMICS
* ITSM SOLUTIONS - IVANTI SOFTWARE TOOLS
* CLOUD SOLUTIONS - AMAZON AWS
* CUSTOM MOBILE APPLICATIONS - XAMARIN, PHONEGAP, ANDROID, IOS
* CUSTOM WEB APPLICATIONS - JAVA, .NET ...
* INC 5000 FASTEST GROWING COMPANIES IN AMERICA
* FAST GROWING PRIVATE 50 COMPANIES IN COLUMBUS
131 N. High Street
Suite 640
Columbus, OH 43215
ph: 614.221.2277
info@devcare.com
www.devcare.com

## துளிபா (ஐக்கூ)

-கிருத்திகா

உன் நினைவில் நான் நனையும் நேரம்

என் இதயம் பேசும் ஒரே மொழி, வெட்கம்!!

என் இதழ்கள் என்றும் உன் பெயர் முணுமுணுக்க

என் பெயர் எங்கே தொலைந்ததோ!

அகத்தின் வெட்கம்.

மெட்டிக்குள் அடங்கும்!!



கணவன்: எவ்வளவு தடவை உனக்கு சொல்லிருக்கேன், சமைக்கும் போது ஃபோன் பாத்துகிட்டே சமைக்காதேன்னு, இப்போ பாரு ரசத்துல உப்பும் இல்ல, புளியும் இல்ல.

மனைவி: எவ்வளவு தடவை உங்களுக்கு சொல்லிருக்கேன், சாப்பிடும் போது ஃபோன் பாத்துகிட்டே சாப்பிடாதீங்கன்னு, நீங்க ஊத்தி சாப்பிடுறது ரசம் இல்ல, பக்கத்துல வச்சிருந்த தண்ணி.

கணவன்: ?!?!

**வார்த்தையோடு விளையாடு:** **(விடைகள் : 33ஆம் பக்கம்)**

| | |
|---|---|
| 1. க்கம்கல்ழலைபக | 2. ம்பமரபத |
| 3. ள்ணுகருதுக் | 4. தயகாசிரிரி |
| 5. டுயமைப்தத்கபதுல் | 6. த்போததொர்டுல் |
| 7. ட்குருபோம்டாக்கு | 8. க்ம்ஆவுகூடய் |
| 9. வாம்சியததே | 10. வயாம்யத்திசிஅ |

## தங்கமகன் நீரஜ் சோப்ரா



**-பாலாஜி சிவக்குமார்**

சமீபத்தில் நடந்து முடிந்த டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய விளையாட்டு வீரர்கள் ஒரு தங்கம், இரண்டு வெள்ளி மற்றும் நான்கு வெண்கலம் உள்ளிட்ட ஏழு பதக்கங்கள் வென்று நமது நாட்டிற்குப் பெருமை சேர்த்தனர். இதனால், கடந்த நாற்பது வருடங்களில் முதன்முறையாகப் பதக்கப்பட்டியலில் நமது நாடு முதல் ஐம்பது இடங்களுக்குள் வந்தது.

அதிலும் வரலாற்றிலேயே முதன்முறையாக ஒரு தடகளப் போட்டியில் (ஈட்டி எறிதல்) இந்தியாவிற்குத் தங்கப் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா நமது நாட்டில் வளர்ந்து வரும் எத்தனையோ விளையாட்டு வீரர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறார்.




ஒலிம்பிக் போட்டிகளில் அபினவ் பிந்த்ரா தங்கம் வென்ற பிறகு 13 வருட கால காத்திருத்தலுக்குப் பிறகு நீரஜ் சோப்ரா ஈட்டி எறிதல் போட்டியில் தங்கம் வென்று அசத்தியுள்ளார். தகுதிச் சுற்றில் சிறப்பான விளையாட்டை வெளிப்படுத்திய சோப்ரா, இறுதி சுற்றில் 87.58 மீட்டரில் ஈட்டி எறிந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்த ஒரு பெரிய வெற்றிக்குப் பின்னால் அவர் கடந்து வந்த பாதை விளையாட்டு வீரர்கள் மட்டுமல்லாமல் வாழ்வில் முன்னேறத் துடிக்கும் அனைவருக்கும் ஒரு பாடமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அதை இரத்தினச் சுருக்கமாகப் பார்ப்போமா!!!!

நீரஜ் டிசம்பர் 1997, 24 ஆம் நாள் அரியானா மாநிலத்திலுள்ள பானிப்பத் நகரில் ஒரு விவசாயக் குடும்பத்தில் முதல் குழந்தையாகப் பிறந்தார். இவர் தனது சிறு வயதில் சரியாக ஆரோக்கியத்தைக் கவனிக்காததால் பத்து வயதில் 90 கிலோ எடையுடன் இருந்தார். இதனால் நீரஜ்ஜின் பெற்றோர் இவரை உடற்பயிற்சி செய்ய மைதானத்துக்கு அனுப்பினர். அங்கு இவர் ஈட்டி எறிதல் வீரர் ஜெய் சௌத்ரியைச் சந்திக்க நேரிடுகிறது. அந்தத் தருணத்தில், முதன்முறையாக இவர் 35 மீட்டர் எறிந்தார். இதைக் கண்டு வியந்த ஜெய் சௌத்ரி நீரஜ்ஜுக்கு ஈட்டி எறிதலில் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார்.

2016 ஆம் ஆண்டு, தனது 19 ஆம் வயதில், நீரஜ் போலந்தில் நடந்த உலக ஜூனியர் தடகளப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று அனைவரின் கவனத்தையும் தன் பக்கம் திருப்பினார். இதன் மூலம், உலக தடகளத்தில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையை இவர் பெற்றார்.

இதன் பின்னர், நீரஜ் ஆசிய விளையாட்டுப் போட்டி, காமன்வெல்த் போட்டி போன்ற

போட்டிகளில் தொடர்ந்து தங்கம் வென்று நமது நாட்டிற்குப் பெருமை சேர்த்துக் கொண்டே இருந்தார். மேலும், ஈட்டி எறிதலில், தனிப்பட்ட சாதனை மற்றும் புதிய தேசிய சாதனையும் படைத்தார் நீரஜ் சோப்ரா.

2017 ஆம் ஆண்டு ஈட்டி எறிதலில் மிகவும் கைதேர்ந்தவரான ஜெர்மனியைச் சேர்ந்த உவே ஹான் இந்திய அரசாங்கத்தால் நீரஜ் உள்ளிட்ட நமது வீரர்களுக்குப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். இவரின் ஆலோசனையின் கீழ், நீரஜ் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லத் தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டார்.

2019 ஆம் ஆண்டு நீரஜ்ஜின் வாழ்வில் மிகவும் முக்கியமான ஆண்டாக மாறியது. இந்த ஆண்டு, இவரின் ஈட்டி எறியும் வலது கரத்தில் ஒரு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதன் பிறகு சில வாரங்களுக்குள் நடக்க இருக்கும் ஒலிம்பிக் தேர்ச்சி பெறும் போட்டிகளில் இவர் பங்கேற்பது மிகவும் கடினம் என மருத்துவர்கள் கூறிவிட்டனர். ஆனால், தனது அயராத உழைப்பினால், அறுவைச் சிகிச்சையிலிருந்து மீண்டு வந்து, நீரஜ் ஒலிம்பிக்கிற்குத் தேர்வானார்.

பின்னர், 2020 இல் நடக்க வேண்டிய ஒலிம்பிக் போட்டிகள் கொரோனாவினால், 2021 ஆம் ஆண்டு நடந்தன. இதனால், ஒலிம்பிக்கிற்கு முன் தனக்குக் கிடைத்த இன்னொரு ஆண்டிலும் நன்றாகப் பயிற்சி செய்து ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார்.

கடும் உழைப்பும், விடா முயற்சியும் சேர்ந்ததால் தான் நீரஜ்ஜால் இவ்வளவு தடைகளுக்குப் பிறகும் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்ல முடிந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.



## தண்ணீர் தேசம் - தமிழில் ஒரு விஞ்ஞான காவியம்



**- சத்தியமூர்த்தி**

‘கருவாச்சி காவியம்’ கவிதை என்று நினைத்தேன், ஆனால் நாவல். தண்ணீர் தேசம் "நாவல்" என்று நினைத்து படித்தேன், ஆனால் கவிதை நடையில் ஒரு கடல் பயணம் செய்யும் நாவல். நண்பர்கள் இணைந்து மீனவர்களுடன் கடலுக்குள் செல்கிறார்கள், நடுக்கடலில் படகு நின்று விடுகிறது. தண்ணீர் தேசத்தில் சிக்கியவர்கள் எப்படிக் கரை சேர்ந்தார்கள் என்பதுதான் கதை. கவிதை நடையில் ஒரு நாவலை எழுதி, நெய்தல் களத்தில் களமாடியிருக்கிறார் வைரமுத்து. நம் அறிவுக்கு எட்டாத பல அறிவியல் செய்திகளைத் திரட்டி, புள்ளி விவரங்களுடன் ஒரே நூலில் சொல்லி இருக்கிறார்.

இசக்கி, பரதன், பாண்டியன், சலீம், கலைவண்ணன் இவர்கள்தான் கதையின் நாயகர்கள். ஒரு பறவை உன் தலைக்கு மேலே பறப்பதை உன்னால் தடுக்க முடியாது. ஆனால், அது உன்தலையில் கூடுகட்டாமல் உன்னால் தடுக்கமுடியும். பூமியை பற்றிக்கொள்ளும் வேர்களைப் போல் நீ நம்பிக்கையைப் பற்றிக்கொள் என்கிறது நாவல்.

உடம்பில் நீர் குறைந்தால் தாகத்தின் வழியே அது தண்ணீர் கேட்கும். உடம்பு களைத்துப் போனால் கண்கள் உறக்கம் கேட்கும். புறத்தோலில் அரிப்பென்றால் உறக்கத்திலும் சொறியக் கேட்கும். உயிர் துடித்தால் கலவி கேட்கும். உடல் துடித்தால் உணவு கேட்கும். சுமப்பவனுக்குத்தான் தெரியும் சாலையின் தூரம். விழிப்பவனுக்குத்தான் தெரியும் இரவின் நீளம். பொறுமையாய் இருந்தால் தண்ணீரைக் கூடச் சல்லடையில் அள்ளலாம் - அது பனிக் கட்டியாகும் வரை பொறுத்திருந்தால். மொட்டுக்களை உடைத்துவிட்டதற்காகச் செடியிடம் தென்றல் மன்னிப்புக் கேட்பதில்லை. சிவக்கச் சிவக்கச் சுட்டுவிட்டதற்காகத் தங்கத்திடம் நெருப்பு மன்னிப்புக் கேட்பதில்லை. தடயங்கள் அழியலாம். தத்துவங்கள் அழிவதில்லை. மழைக்கு வாய்திறக்கும் பூமி, இடியை மட்டும் ஏற்க மாட்டேன் என்றால் எப்படி?




கலைவண்ணன் பத்திரிகையாளன், அவனது காதலி தமிழ் ரோஜா. தண்ணீர் என்றால் கலைவண்ணனுக்கு விருப்பம். தமிழ் ரோஜா பள்ளியில் படிக்கும் போது படகில் இருந்து தண்ணீரில் விழுந்து உயிர் பிழைத்ததால், தண்ணீர் என்றாலே பயம். தண்ணீர் பயத்தைப்

போக்க, திட்டமிடாமல் தனது மீனவ நண்பர்களுடன் தமிழ் ரோஜாவைப் படகில் கடலுக்கு அழைத்துச் செல்கிறான் கலைவண்ணன். நடுக்கடலில் படகு பழுதாகி விட, சுற்றிலும் தண்ணீர், பிடிக்காத சூழல் என்று தமிழ் ரோஜாவுக்குச் சூழ்நிலை மோசமாக அமைந்து விட என்ன ஆகிறது என்பதே கதை.

வாழ்வில் வரும் துன்பங்கள் எல்லாம் நிரந்தரம் இல்லை. சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்ளும் உயிரினங்கள் மட்டுமே நிலைத்து வாழும் என்பதுதான் சாரம். ரசனை குறையாமல் எழுதப்பட்டு இருக்கும் இந்த நாவல் தவறவிடாமல் படிக்க வேண்டிய நாவல்.




எனக்குப் பிடித்தவற்றில் சில வரிகள் மட்டும் இங்கே.....

*தண்ணீர் பயம் தவிர்.*

*சொட்டச் சொட்ட நனை.*

*கிட்டத்தட்ட குளி.*

*நீரின் பெருமை நிறையப்பேர்*

*அறியவில்லை. காதலி பெருமை*

*பிரிவில். மனைவி பெருமை*

*மறைவில். தண்ணீரின் பெருமை*

*பஞ்சத்தில்,அல்லது*

*வெள்ளத்தில்.*

*வாழ்நாளில் 66,000 லிட்டர்*

*தண்ணீர் குடித்தான்.*

*ஆயுளில் மூன்றில் ஒருபங்கு*

*தூங்கினான்.*

*நான்குகோடி முறை*

*இமைத்தான்.*

*நாலரை லட்சம் டன்*

*ரத்தத்தை இதயத்தால்*

*இறைக்க வைத்தான்.*

*35 ஆயிரம் கிலோ உணவு –*

*அதாவது எடையில் இந்திய*

*யானைகள் ஏழு தின்றான்.*

*மரித்துப் போனான்.*

*இதற்குத்தானா மனிதப் பிறவி?*


CENTRAL OHIO
PRIMARY CARE
THE BEST FOR PRIMARY CARE
Internal Medicine
Family Medicine
Pediatrics
Hospitalists
Care Coordination
Physical Therapy
Radiology/Imaging
SameDay Centers
Wellness Education
At Central Ohio Primary Care we pride ourselves on the COMPREHENSIVE CARE our doctors offer to our 400,000 patients in over 75 practices across Central Ohio. Our INDEPENDENT PROVIDERS' sole focus is what's best for our patients; which is why we are THE BEST FOR PRIMARY CARE.
Find a COPC doctor in your neighborhood
copcp.com/FindMyDoctor or call (614) 326-4646.

## சமைக்க, ருசிக்க



**-மோகனப்ரியா**

### அகர் அகர் ரோஸ் புட்டிங் *(Agar agar rose pudding)*

**தேவையான பொருட்கள்:**

அகர் அகர் *(China grass)* - *5* கிராம்

பால் - ½ லிட்டர்

சர்க்கரை - *1* கப்

ரோஸ் மில்க் எசென்ஸ் - *1* தேக்கரண்டி



**செய்முறை:**

முதலில் ஒரு பாத்திரத்தில் அகர் அகரை போட்டு, அது மூழ்கும் அளவு தண்ணீரில் *10* நிமிடம் ஊற வைக்க வேண்டும். பிறகு அடுப்பில் வைத்து அது கரையும் வரை நன்றாக கலக்கவும். இன்னொரு பாத்திரத்தில் அரை லிட்டர் பாலை கொதிக்க வைக்கவும். பால் நன்றாக கொதித்தவுடன் அதில் ஒரு கப் சர்க்கரை போட்டு நன்றாக கலக்கி விடவும். பாலை அணைத்து விட்டு கரைத்து வைத்த அகர் அகரை பாலில் ஊற்றி நன்றாக கலந்து விடவும்.

ரோஸ் மில்க் எசென்ஸ் ஒரு தேக்கரண்டி சேர்த்து நன்றாக கலக்கவும். பிறகு வடிகட்டி கொள்ளவும்.

ஒரு தட்டில் சிறிது எண்ணெய் தடவி *(brushing)* அதில் அப்படியே அகர் அகர் கலந்த பாலை ஊற்றி குளிர்சாதன பெட்டியில் நான்கு மணி நேரம் வரை வைக்கவும். பிறகு எடுத்து தேவையான அளவில் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். சுவையான அகர் அகர் ரோஸ் புட்டிங் தயார்.

நோயாளி : டாக்டர், என்னால முழுசா ரெண்டு இட்லி கூட சாப்பிட முடியல.

டாக்டர் : யாராலயும் ரெண்டு இட்லி முழுசா சாப்பிட முடியாது.





## சித்திரம்





- தனுஷ்ராம் சதீஷ்



- நந்தினி விஜயகுமார்







-லித்திக்கா பாலாஜி





- கோகுல் கிருஷ்ணன்





- ஆசிதா



-அஸ்வினி



## நற்தமிழ்ச் சங்கத்திற்கு நன்றி



- நடராசன்

கொல்லும் கொரோனா கொடுமைநடுவே
கொலம்பஸில் கொஞ்சம் குதூகலம் இன்று!!
இலையுதிர்கால இன்னல் இளையவே
இன்தமிழர்க்கு இனியதோர் நிகழ்ச்சி!!

தொன்மைமிகு தமிழுக்கு
தொடர்ச்சியும் வேண்டுமென்றே
தொண்டுதனை தொடர்ந்தளிக்கும்
தமிழ்ச்சங்க அமைப்பிற்கும்..
தாய்நாட்டு துயர்துடைக்க
தளராது உழைத்துவரும்
தன்னார்வ குழுக்களுக்கும்..

சிரம்தாழ்த்தி கரம்குவித்து
வணங்கிடுவோம்..
வாழ்த்திடுவோம்..
வளர்ந்திடுவோம்...



**விடுகதைகள்**

**(விடைகள் : 33ஆம் பக்கம்)**

1. அச்சு இல்லாத சக்கரம்; அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
2. வெயிலில் மலரும்; காற்றில் உலரும். அது என்ன?
3. எவ்வளவு முயன்றாலும் கடிக்க முடியாது; ஆனால் இது இல்லாமல் உணவே இல்லை. இது என்ன?
4. தலை இல்லாதவன்; தலையை சுமப்பவன். அவன் யார்?
5. ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம். அது என்ன?


Always Hiring
Technology Professionals
and Graduate Students
American Business Solutions, Inc.
Call Toll Free :877-781-ABSI
Visit us at: http://www.absi-usa.com
50
Inc. 5000
Forbes
GSA
Top 10 IT Firm * Many Direct Clients * Free Sponsorship H1B & GC EB2
OUR SERVICES:
Consulting
Staffing
Solutions

## இலையும் சருகும்

பாட்டி விசாலத்தின் பெயரை முதியோர் இல்லத்தில் பதிவு செய்து விட்டு வந்த பின்னும் மூன்று நாட்களாக அந்தத் தகவலை தாயிடம் சொல்லத் தயங்கினான் சதீஷ்.

ஏன் இப்படி பயந்து சாகறீங்க? என்று எரிந்து விழுந்தாள் அவன் மனைவி சத்யா.

இல்லை. அம்மாவுக்கு இது பெரிய ஷாக்காய் இருக்கும்

இதப்பாருங்க. மாமியாரைப் பார்த்துக்கலாம். அது என் டியூட்டி. ஆனா, மாமியாரோட மாமியாரைப் பார்த்துக்கறதெல்லாம் டூ மச்.

அவன் ஒன்றும் சொல்லாமல் மவுனமாய் இருந்தான்.

அடுத்த வாரம் அனுப்பனும்ன்னா இப்பவே சொன்னாத் தான் அவங்களுக்குப் பேக் பன்ன டைம் கிடைக்கும். சைக்காலஜிக்கலா தயாராகவும் முடியும். கிழவி இப்ப கோவிலுக்குப் போயிருக்கா. அதனால, இப்பவே போய் உங்க அம்மாவிடம் சொல்றீங்க, நீங்க

மனைவியிடம் வழக்கம் போல் தலையசைத்தான் சதீஷ். தயக்கத்துடன் ஹாலில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த அம்மா முன் சோபாவில் உட்கார்ந்தான்.

புத்தகத்திலிருந்து பார்வையை எடுத்து மகனைப் பார்த்தாள் ஜானகி. அம்மா நான் பாட்டி பேரை முதியோர் இல்லத்தில் பதிவு செஞ்சிருக்கேன், அட்வான்சும் கொடுத்துட்டேன்!

ஜானகியின் கையில் இருந்த புத்தகம் நழுவிக் கீழே விழுந்தது. அவள் அதிர்ச்சியுடன், என்னடா சொல்றே? என்றாள்.

தர்ம சங்கடத்துடன் தங்கள் அறைக் கதவு அருகே நின்ற சத்யாவைப் பார்த்தான் சதீஷ். அவள், தைரியமாய் பேசுங்கள்' என்று சைகை காண்பித்தாள்.

கீழே விழுந்த புத்தகத்தை மேஜை மீது வைத்து அதைப் பார்த்தபடியே சொன்னான் சதிஷ்.

இவ்வளவு வருஷமாய் பாட்டியை நாம பார்த்துகிட்டாச்சும்மா, இனிமேயும் பார்த்துக்கறது கஷ்டம்மா

பாட்டி நல்லாத் தானே இருக்காங்க அவங்கள பார்த்துக்கிறதில் கஷ்டம் என்னடா இருக்கு?'

அவன் பதில் சொல்லவில்லை.

தன் கோபத்தை அப்படியே விழுங்கிக் கொண்டு சொன்னாள் ஜானகி.

சதீஷ் என் சித்தி கொடுமைக்காரின்னு, உன்னை பிரசவிக்க அவங்க எங்க வீட்டுக்குக் கூட என்னை அனுப்பாம தானே பிரசவம் பார்த்தவங்கடா'

அதுக்காக தான் அப்பா செத்தப்பறம் கூட அவங்களை வெளியே அனுப்பாம நீயே இத்தனை வருஷம் பார்த்துகிட்டியேம்மா.

உன்னோட பி.ஈ., படிப்புக்கு பீஸ் கட்ட தன்கிட்ட இருந்த கடைசி நகையைக் கூட வித்தவங்கடா அவங்க'

அதுக்காக தான் மாசா, மாசம் முதியோர் இல்லத்தில் ஆயிரத்து ஐநூறு ரூபாய் கட்ட ஒத்துக்கிட்டேன்மா

நாம இருக்கறப்போ ஒரு அநாதை மாதிரி அவங்களை ஏண்டா அங்க சேர்க்கனும்?

பாட்டிக்கு நாம மட்டும் இல்லையேம்மா. அத்தை கூட இருக்கா இல்லையா? வேனும்ன்னா, பெத்த பொண்ணு கூட கொஞ்ச நாள் இருக்கட்டுமே.

அவ அவங்களுக்கு ஒரு வேளை சோறு ஒழுங்கா போட மாட்டாடா.!

அது தெரிஞ்சு தான் முதியோர் இல்லத்தில் சேர்க்க நாங்க முடிவு செஞ்சோம்.

பொறுமையாக இரு என்று தனக்குள் பல முறை சொல்லிக் கொண்டு மகனைக் கேட்டாள் ஜானகி.

பாட்டியால உங்களுக்கு என்னடா தொந்தரவு? ஏன் அனுப்ப முடிவு செஞ்சீங்க?'

தங்கள் அறைக் கதவைப் பார்த்தான் சதீஷ். உள்ளே போயிருந்தாள் சத்யா. வேறு வழியில்லாமல் உண்மையை அவன் சொன்னான்.

பாட்டி இங்க இருக்கறது சத்யாக்கு பிடிக்கலைம்மா'

மகனை அருவெறுப்புடன் பார்த்தாள் ஜானகி. அவளுக்குள் ஏற்பட்ட பூகம்பம் அடங்க சிறிது நேரம் பிடித்தது.

பின் உடைந்த குரலில் மகனிடம் சொன்னாள்.

சதீஷ் நல்லா யோசிடா இது சரியில்லைடா'

நாங்க நல்லா யோசிச்சாச்சும்மா'

மவுனமாக கண்களை மூடி சிறிது நேரம் அமர்ந்திருந்தாள் ஜானகி.

உனக்கு அவங்க கிட்டே சொல்ல கஷ்டமாய் இருக்கும்ன்னு எனக்குத் தெரியும். பக்குவமாய் நானே அவங்க கிட்ட சொல்றேன்மா.

ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தாள் ஜானகி.

சிறுவயதிலேயே தாயை இழந்து சித்தியிடம் பல கொடுமைகளை அனுபவித்த ஜானகி, தன் திருமணத்திற்குப் பிறகு மாமியார் விசாலத்திடம் ஒரு தாயையே பார்த்தாள். சூது, வாது தெரியாத, நேசிக்க மட்டுமே தெரிந்த விசாலமும் தன் மருமகளை மகளாகவே பாவித்தாள்.



ஜானகியின் நாத்தனார் கிரிஜா, தன் தாயைப் போல யதார்த்தமானவளாக இருக்கவில்லை. அவள் ஜானகியைப் பற்றி இல்லாததும், பொல்லாததும் தன் தாயிடம் சொல்வதை பலமுறை கேட்டிருக்கிறாள் ஜானகி.

அப்போதெல்லாம், சும்மா வாயிற்கு வந்தபடி பேசாதேடி' என்று மகளை விசாலம் அடக்கினாளே தவிர, என்றுமே அது பற்றி அவள் மருமகளிடம் விசாரித்தது கூட கிடையாது. மகள், மருமகளின் பிரசவத்தை தான் ஒருத்தியே பார்த்துக் கொண்டாள்.

ஒரு விபத்தில் கணவன் அற்ப ஆயுசில் இறந்து போகும் வரை ஜானகியின் வாழ்வு சந்தோஷமாகவே இருந்தது. அண்ணனின் சாவிற்கு வந்த கிரிஜா, தன் தாயைத் தன்னுடன் அனுப்பி விடுவரோ என்று பயந்து பிணத்தை எடுத்த மறுகணம் அங்கிருந்து மாயமாகி விட்டாள்.

பெரிய சேமிப்போ, சொத்தோ இல்லாத அவர்கள் குடும்பத்திற்கு உதவ உறவினர்கள் யாரும் இருக்கவில்லை நிராதரவாக நின்ற ஜானகிக்கு, அவள் மன உறுதியும், அவளது ருசியான சமையலும் கை கொடுத்தன. அவள் ஒரு கல்லூரிக்கு அருகே மெஸ் ஒன்றை ஆரம்பித்தாள். மாமியாரும், மருமகளும் ஓடாய் உழைத்தனர். சில வருடங்களுக்குப் பிறகு விசாலத்தின் முதுமை அவளை உழைக்க ஒத்துழைக்கவில்லை. மாமியாரை உட்கார வைத்து ஜானகி ஒருத்தியே மெஸ்ஸை நடத்தினாள்.



உனக்கு நானும் பாரமாய் இருக்கேன் ஜானகி' என்று புலம்பினாள் விசாலம். சும்மா பாரம், கீரம்ன்னு பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க அத்தை. என்னை பிறந்த வீட்டுக்குக் கூட அனுப்பாம நீங்களே பிரசவம் பார்த்தீங்க. அப்போ நீங்க என்னைப் பாரம்ன்னு பார்த்தீங்களா'

ஒரு பிரசவத்தைப் பார்த்ததைப் பத்தி நீ இன்னும் பேசறே என் பொண்ணுக்கு மூணு பிரசவம் பார்த்தேன். பெத்து வளர்த்த தாயை இப்ப அவ எட்டிக் கூட பார்க்க மாட்டேன்ங்கிறா!

விசாலம் என்ன சொன்னாலும் ஜானகிக்கு மாமியார் ஒரு பாரமாய் தோன்றவில்லை. விசாலம் வெற்றிலை பாக்கு சாப்பிட்டுக் கொண்டும், பக்கத்து வீட்டு லட்சுமிப் பாட்டியிடம் பழங்கதைகள் பேசிக் கொண்டும் உட்கார்ந்திருக்க, சிரமம் சிறிதும் தோன்றாமல் கடுமையாய் உழைத்து குடும்பத்தை நடத்தினாள் ஜானகி.

சதீஷ் கல்லூரிக்குப் போகும் வரை அந்த மெஸ் வருமானம் அவர்களுக்குப் போதுமானதாகவே இருந்தது. அவன் என்ஜினியரிங் சேர்ந்த பிறகு தான் பற்றாக்குறை ஏற்பட்டது. மாமியாரும், மருமகளும் தங்கள் நகைகளை எல்லாம் விற்று சதீஷைப் படிக்க வைத்தனர். அவன் பி.ஈ., முடித்து அவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்த போது, மெஸ்ஸை அவர்கள் மூடினர்.

பல ஆசிரியர்களும், மாணவர்களும் உண்மையாகவே வருத்தப்பட்டனர். அவ்வளவு ருசியான சமையல் வேறு எங்கும் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்று பின்பு ஜானகியைச் சந்திக்கும் போதெல்லாம் கூறினர்.

சதீஷிற்கு திருமணமாகும் வரை அவர்கள் குடும்பம் சுமுகமாகவே இருந்தது. அவன்




மனைவி சத்யா ஒரு வங்கியில் வேலை பார்த்தாள். அவளுக்கு ஆரம்பத்தில் இருந்தே உரத்த குரலில், "டி' போட்டுப் பேசும் விசாலத்தைப் பிடிக்கவில்லை. வீட்டுக்கு வந்த அவளது சிநேகிதிகளின் எதிரிலும் அதே போலப் பேசியது அவளுக்கு பெருத்த அவமானமாக இருந்தது.

ஒரு வேலையும் செய்யாமல், ஒரு பைசாவிற்கும் பிரயோஜனம் இல்லாமல் தண்டமாக இருக்கும் விசாலத்தை, "சுத்த நியூசன்ஸ்' என்று அவள் கணவனிடம் சொல்லாத நாளில்லை.

ஒருமுறை ஏதோ ஒரு வேலையை விசாலத்திடம் சத்யா சொல்ல, அந்த வேலையைத் தானே செய்து விட்டு தன் மருமகளிடம் சொன்னாள் ஜானகி.

அவங்க காலத்தில் அவங்க வேணும்ங்கிற அளவு வேலை செஞ்சிருக்காங்க. இனிமே உனக்கு ஏதாவது செய்யணும்ன்னா நீ என்கிட்டே சொல்லு. நான் செய்யறேன். இந்த வயசான காலத்தில் அவங்க கிட்டே நாம வேலை வாங்கக் கூடாது' அதிலிருந்து ஜானகி இருக்கையில் விசாலத்திடம் பேசுவதை தவிர்த்தாள் சத்யா.

அவர்கள் புதிய வீட்டுக்கும், பக்கத்து வீதியில் இருந்த லட்சுமிப் பாட்டி தினமும் விசாலத்திடம் பேச வருவதை நிறுத்தவில்லை. அந்தக் கிழவியைப் பார்த்தாலும் சத்யாவிற்குப் பிடிக்கவில்லை. தனக்குப் பிடிக்காததை எல்லாம் ஜானகி இல்லாத போது அவள் விசாலத்திடம் முகத்தில் அடித்தாற் போல சொல்லத் துவங்கினாள்.

விசாலம் சப்தமாய் பேசுவது, வெற்றிலை பாக்கு போடுவது, லட்சுமி பாட்டி அவர்கள் வீட்டுக்கு வருவது எல்லாம் ஒரு காலத்தில் நின்று போயின. சத்யா இருக்கும்போது தானிருக்கும் அறையை விட்டு வெளியே வரக் கூடப் பயந்தாள் விசாலம். ஆனாலும், சத்யாவின் வெறுப்பு ஏனோ குறையவில்லை.

விசாலம் வாய்விட்டு ஒன்றும் சொல்லா விட்டாலும், ஜானகிக்கு எல்லாம் தெரிந்து தானிருந்தன. ஏதோ ஒரு கைதியைப் போல அடங்கி, ஒடுங்கி, பயந்து வாழும் தன் அத்தையைப் பார்க்க அவளுக்கு வேதனையாக இருந்தது.

இன்று சதீஷ் திடீரென்று முதியோர் இல்ல குண்டை போடுகிறான். பிடிக்கவில்லை என்ற வெற்றுக் காரணம் சொல்லி நெருங்கிய சொந்த, பந்தங்களை இவர்களால் எப்படி உதறித் தள்ள முடிகிறது என்பது தான் அவளுக்கு விளங்கவில்லை.

கோவிலிலிருந்து விசாலம் வந்ததும் பாட்டியை சோபாவில் உட்கார வைத்து, மெல்லிய குரலில் சிறிது நேரம் பேசினான் சதீஷ். அவள் அறைக்கு வந்த போது பத்து வயது கூடியது போலத் தளர்ந்திருந்தாள். அந்த முகத்தில் தெரிந்த அதிர்ச்சியைத் தாங்கும் சக்தி ஜானகிக்கு இருக்கவில்லை.

நிறைய நேரம் பேசாமல் கட்டிலில் பிரமை பிடித்தது போல உட்கார்ந்திருந்தாள் விசாலம். பின்பு மருமகளிடம் சொன்னாள். பரவாயில்லை அவன் என்னை நடுத்தெருவில் விட்டுடலியே... பணம் குடுத்து ஒரு இடத்தில் தங்கத் தானே வைக்கிறான். என்ன பிரச்னைன்னா நான் இத்தனை நாள் உன் நிழல்லேயே இருந்துட்டேனா ஜானு, உன்னை விட்டு பிரியறதுன்னா மனசுக்கு ரொம்பவே கஷ்டமாய் இருக்குடி

கண்களில் பெருகிய நீரைக் காண்பிக்க விரும்பாமல் முகத்தை அந்தப் பக்கம் திருப்பிக் கொண்டாள் ஜானகி. அன்றிரவு அவளும், விசாலமும் உறங்கவில்லை. முதியோர் இல்ல வாழ்க்கையை எண்ணி விசாலம் பயந்து கொண்டிருந்தாள் என்றால், ஜானகியோ வேறு பல சிந்தனைகளில் இருந்தாள். மறுநாள் காலை சீக்கிரமாகவே சமையலை முடித்து வெளியே போன ஜானகி, மாலை மகனும், மருமகளும் வருவதற்கு சற்று முன் தான் வந்தாள்.

ஏண்டி ஜானு இவ்வளவு நேரம் எங்கே போயிட்டே? நான் என்னென்னவோ நினைச்சு பயந்தே போயிட்டேன்," என்ற விசாலத்தைப் பார்த்து அவள் புன்னகை செய்தாளே ஒழிய பதில் ஏதும் சொல்லவில்லை.

அன்று இரவு கீழே உட்கார்ந்து தங்கள் இருவருடைய துணிமணிகளையும் சூட்கேஸ்களில் அடுக்கிய ஜானகியை கட்டிலில் உட்கார்ந்திருந்த விசாலம் திகைப்புடன் பார்த்தாள்.

என் துணிமணியை எடுத்து வைக்கிறது சரிதான் உன்னோடதை ஏண்டி ஜானு எடுத்து வைக்கிற?

உங்களை விட்டுட்டு நான் எப்படி அத்தை தனியாய் இருப்பேன். சாப்பிட்டா, எனக்குத் தொண்டையில் சோறு இறங்குமா? அதனால, நாம ரெண்டு பேரும் சேர்ந்து தான் இங்கிருந்து போறோம்

என்னடி சொல்றே ஜானு? நீயும் என் கூட முதியோர் இல்லத்துக்கு வர்றியா?

இல்லை அத்தை நாம் முதியோர் இல்லத்துக்குப் போகப் போறதில்லை. நான் பழையபடி மெஸ் ஆரம்பிக்கப் போகிறேன். நாம ரெண்டு பேரும் நம்ம அந்தப் பழைய வீட்டுக்கே போகப் போகிறோம்.



விசாலம் அதிர்ச்சியில் இருந்து மீள சிறிது நேரம் தேவைப்பட்டது. பின் அவள் கண்கள் கலங்க சொன்னாள்.

ஜானு, என் ராசாத்தி, வேண்டாண்டி எனக்காக நீ இந்தப் பைத்தியக்காரத்தனம் செஞ்சுடாதே. நான் உன்னை விட்டுப் போய் ரொம்ப நாள் இருக்க மாட்டேண்டி. சீக்கிரமே செத்துடுவேன்.

என்னோட இந்தக் கொஞ்ச நாள் கஷ்டத்துக்காக நீ இந்த முடிவு எடுத்துடாதேடி நீ, இது நாள் வரைக்கும் எனக்கு செஞ்சதுக்கே நான் ஏழு ஜென்மத்துக்கு உன் கால் செருப்பாய் இருந்தாக் கூட உன் கடன் தீர்க்க முடியாதுடிம்மா.

மாமியாரின் காலடியில் வந்து உட்கார்ந்த ஜானகி பாசத்துடன் அவளைப் பார்த்தாள்.

உங்களுக்காக நான் இந்த முடிவெடுத்தேன்னு யார் சொன்னது? அத்தை... எனக்கு இப்ப உழைக்கத் தெம்பிருக்கு. அதனால தான் என்னைக் கூட வச்சிருக்காங்க. ஒரு நாள் நானும், உங்க மாதிரி ஓய்ஞ்சுடுவேன். அப்போ, எனக்கும் முதியோர் இல்லம் தான் போக வேண்டி வரும். அதை புரிஞ்சு இப்ப நான் முழிச்சுகிட்டேன். அதான், இந்த முடிவு. நல்ல வேளையா, அந்த மெஸ் வீடு இப்ப காலியாத்தான் இருக்கு. நான் மெஸ் ஆரம்பிக்கப் போறேன்னு அங்கே சொன்னதும், சந்தோஷமா அந்தக் காலேஜ் வாத்தியாருங்க, பசங்க எல்லாம் சேர்ந்து பேசி அட்வான்ஸ் கூட கலெக்ட் பண்ணி என்கிட்ட கொடுத்துட்டாங்க.

அத்தை நமக்குப் பெரிய செலவில்லை உடுக்க துணி, இருக்க கூரை, வயத்துக்கு சோறு இதைத் தவிர வேற என்ன வேணும் சொல்லுங்க. மீதமாகிற காசை நான் சேர்த்து வைக்கப் போறேன். என் கடைசி காலத்தில் நான் முதியோர் இல்லம் போக வேண்டி வந்தாக் கூட என் சொந்தக் காசில் போய் இருக்க ஆசைப்படறேன்.

உன்னையெல்லாம் சதீஷ் அப்படிக் கை விட்டுட மாட்டான் ஜானு. அவன் நல்லவன்டி

சுயமாய் முடிவெடுக்கவும், செயல்படவும் முடியாதவங்க, நல்லவங்களா இருந்தாலும் பிரயோஜனம் இல்லை அத்தை, தாங்க முடியாத துக்கத்துடன் மருமகளை வெறித்துப் பார்த்தாள் விசாலம்.

அத்தை. எல்லாத்துக்கும் மேல நாம நம்ம வீட்டில் சுதந்திரமாய் இருக்கலாம் நீங்க சப்தமாய் பேசலாம். வெத்திலை, பாக்கு

போடலாம் லட்சுமி பாட்டியோட மணிக்கணக்கில் பேசலாம்'

மருமகள் சொல்லச் சொல்ல, அவளைக் கட்டிக் கொண்டு நிறைய நேரம் அழுதாள் விசாலம். அதற்குப் பிறகு பேச அவளுக்கு வார்த்தைகள் இருக்கவில்லை.

மறுநாள் கால்டாக்சிக்குப் போன் செய்து விட்டு மகனிடம் தன் முடிவைச் சொன்னாள் ஜானகி.

அவன் எரிமலையாக வெடித்தான்.

அம்மா, உனக்குப் பைத்தியம் பிடிச்சுடுச்சா? உனக்கென்ன இப்ப வேலைப் பார்கிற வயசா?'

நான் இங்கே மட்டும் சும்மாவா உட்கார்ந்திருக்கேன்?

அம்மா நான் அந்த முதியோர் இல்லத்தில் பாட்டிக்காக அட்வான்ஸ் கூட கொடுத்துட்டேன்.

தங்கள் சூட்கேஸ்களை எடுத்து டாக்சி டிரைவரிடம் கொடுத்து விட்டு மகனிடம் சொன்னாள் ஜானகி.

அது வீணாப் போகாதுடா அப்படியே வச்சிருக்கச் சொல்லு. 30 வருஷம் கழிச்சு நீங்க போறப்ப உபயோகமாகும்'

திடீர்ன்னு இப்படிக் கிளம்பினா எப்படி? நான் வேலைக்கு வேற ஆள் கூட ஏற்பாடு செய்யலை' என்றாள் சத்யா.

பதில் பேசவில்லை ஜானகி. அதிர்ச்சியிலிருந்து மீளாத மகனையும், திகைப்பில் ஆழ்ந்த மருமகளையும் பொருட்படுத்தாமல், தன் மாமியாரை கைத் தாங்கலாய் பிடித்துக் கொண்டு அந்த வீட்டை விட்டு வெளியேறினாள் ஜானகி.

எத்தனை நேரம் இலையானது இலையாகவே இருக்கும். சருகாகுமல்லவா? சுமந்த போது நம்மை பாரமாக நினைக்காத தெய்வத்தை பாரமாக நினைப்பது எவ்வளவு கொடுமையானது. தாயிடம் பேச்சுத்திறமையால் தர்க்கம் செய்யாதீர்கள் ஏனென்றால் அவள் தான் உனக்கு பேசவே கற்றுக்கொடுத்தவள் தாயைத் தவிர்க்க நினைக்கும் படிப்பாளிகள், தாயை இழந்தவர்களிடம் கேட்டுப்பாருங்கள் வாழும்தெய்வம் அது. நாம் நன்றாக இருக்கவேண்டும் என நினைக்கும் ஒரே உயிர் அது கண்ணீரோடு நம் தாய்களுக்கு சமர்ப்பணம்.....

……………**படித்ததில் பிடித்தது**

நபர் 1: கல்யாணம் நடக்குமா நடக்காதா என்று டாஸ் போட்டு பார்த்தேன்.

நபர் 2: தல விழுந்துச்சா இல்லை பூ விழுந்துச்சா?

நபர் 1: காசு உருண்டு போய் சாக்கடையில் விழுந்துருச்சி.

bestbrains

## கொலம்பஸ் தமிழ்ச் சங்க செய்திகள்



- **பாலாஜி சிவக்குமார்**

கடந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து இப்பொழுது வரை நாம் எல்லோரும் "கொரோனா" எனும் அரக்கனை பரவவிடாமல் தடுக்க நம்மால் முடிந்தவற்றை செய்து வருகிறோம். இதற்காக சாரல் ஆசிரியர் குழுவின் சார்பில் கொலம்பஸ் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஒரு "சபாஷ்".

நாம் எல்லோரும் நிகழ்நிலையில் அனைத்து பணிகளையும் செய்து வரும் இந்த சவாலான காலகட்டத்தில், நமது கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் தமிழ் மக்களின் பொழுதுபோக்கு மற்றும் குழந்தைகளின் தமிழார்வம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கடந்த மூன்று மாதங்களில் கீழ்காணும் நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தியது.

'கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் மற்றும் மரபு கல்வி கலைகூடம் இணைந்து நடத்திய நிகழ்நிலை சிலம்பம் பயிற்சி', '2021 – 23 ஆண்டுகளுக்கான கொலம்பஸ் தமிழ்ச்சங்க நிர்வாகக்குழு தேர்தல்' மற்றும் 'கொலம்பஸ் தமிழ் மக்களுக்கான கோடை சுற்றுலா'.

### நிகழ்நிலை சிலம்பம் பயிற்சி

நமது சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளது போல சிலம்பம் கி.மு நான்காம் நூற்றாண்டிலிருந்து பழக்கத்திலிருந்து வரும் ஒரு பழம்பெரும் தற்காப்பு கலையாகும். சிலம்பம் நமது உடலை எந்தவித தற்காப்பு கலைக்கும் தயார்படுத்தும். மேலும், அது நமது உடலின் நெகிழ்வுதன்மையை கூட்டி கை-கண் ஒருங்கிணைப்பையும் அதிகப்படுத்தும்.

இந்த "கொரோனா"வின் சவாலான கால கட்டத்தில், நம் கொலம்பஸ் தமிழ் மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் கடந்த ஜூன் மாதம் 15ஆம் தேதி முதல் நிகழ்நிலையில் சிலம்பம் பயிற்சியை ஏற்பாடு செய்திருந்தது கொலம்பஸ் தமிழ்ச் சங்கம். இது வாரம் ஒரு வகுப்பாக மூன்று மாதங்கள் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.



இந்த முயற்சிக்கு நம் தமிழ் மக்கள் நல்ல வரவேற்பளித்து, நிறைய பேர் முன்பதிவு செய்து கொண்டு சிலம்பம் கற்று பயன் பெற்றனர்.

### கொலம்பஸ் தமிழ்ச்சங்க நிர்வாகக்குழு தேர்தல்

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொலம்பஸ் தமிழ்ச்சங்க பணிகளை அர்ப்பணிப்புடன் செய்து வந்த நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் இந்த ஆண்டுடன் நிறைவடைந்தது. இதனால்

2021-2023 ஈராண்டுக்கான நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க நிர்வாகக்குழு தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டு, விண்ணப்பம் கோரும் பணி ஜூன் மாதம் நடைபெற்றது.

கொடுக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தாமாக முன்வந்து திரும்பப்பெறப்பட்டவை நீங்கலாக ஒன்பது விண்ணப்பதாரர்களே இறுதியாக இருந்ததால் அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



புதிதாகத் தேர்வான நிர்வாகிகள், விதிமுறைகளுக்குட்பட்டு அவர்களுக்குள் ஆலோசித்து முக்கிய பொறுப்புகளுக்கும், சிறப்பு பொறுப்புகளுக்கும் தகுதியானவர்களை ஒருமனதாக இனம்கண்டு கொலம்பஸ் தமிழ்ச்சங்க தேர்தல் மேற்பார்வையாளரின் ஒப்புதலுடன் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட தமிழ்ச்சங்க நிர்வாகிகளுக்கு தமிழ்த் திண்ணையின் சார்பாகவும், உங்கள் அனைவரின் சார்பாகவும் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- தலைவர்
  தனசீலன் காளிமுத்து
- செயலாளர்
  மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்
- பொருளாளர்
  அன்னலக்ஷ்மி தேவசுந்தரம்
- மக்கள் தொடர்பு ஒருங்கிணைப்பாளர்
  ஜெகதீஸ்வரன் கணேசன்
- நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
  லாவண்யா ராமு
- போட்டிகள் ஒருங்கிணைப்பாளர்
  சிவசங்கரி கணேஷ்
- தகவல்தொடர்பு ஒருங்கிணைப்பாளர்
  காயத்ரி தேவி முத்து
- விளையாட்டு & பொழுதுபோக்கு ஒருங்கிணைப்பாளர்
  பழனிவேல் குப்புசாமி
- தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்
  வினோத்ராஜ் சுந்தரம் பாபு

**கோடை சுற்றுலா**

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் கொரோனாவுக்கு மத்தியிலும் கொலம்பஸ் தமிழ் மக்களுக்கு பல்வேறு நிகழ்நிலை நிகழ்ச்சிகளை வழங்கி வந்த நம் தமிழ்ச் சங்கம், முதன்முறையாக நேரடி நிகழ்ச்சியாக கோடை சுற்றுலா ஒன்றை செப்டம்பர் மாதம் 26 ஆம் தேதி ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சியில் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இந்த சுற்றுலாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. நம் கொலம்பஸில் வீட்டிலிருந்து தொழில் செய்யும் பல சிறு வியாபாரிகளுக்கு ஒரு சிறு கட்டணத்தில் விற்பனையகங்கள் வைத்து வியாபாரம் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு வந்திருந்த மக்களும் இந்த விற்பனையகங்களில் விற்கப்பட்ட தங்களுக்கு பிடித்தமான பொருட்களை வாங்கி மகிழ்ந்தனர்.

பெரியோர்களுக்கு நடத்தப்பட்ட சமையல் போட்டி, சிற்றுண்டி செய்யும் போட்டி, பழம் செதுக்குதல், கைப்பந்து, இறகுப்பந்து போன்ற போட்டிகளில் பலர் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இது போலவே சிறுவர்களுக்காக நடத்தப்பட்ட கரண்டியில் எலுமிச்சைப்போட்டி மற்றும் மிதிவண்டி அணிவகுப்பு போட்டிகளில் வாண்டுகள் அனைவரும் பங்கேற்று மகிழ்ந்தனர்.

விளையாட்டுப் போட்டிகள் மட்டுமின்றி சிலம்பம் சுற்றுதல், சிறுவர்கள் மற்றும் பெரியோர்கள் பங்கேற்ற ஆடல் பாடல் நிகழ்ச்சிகள், பரிதி பறை குழுவின் பறை இசை என பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடந்தேறின. இவை எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக நடத்தப்பட்ட திடீர் வினாடி வினா நிகழ்ச்சியில் வந்திருந்த அனைவரும் பங்கேற்று விளையாடினர். இதில் முதலாவதாக வந்தவருக்கு ஒரு பெரிய பரிசுப்பொருள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் நிறைவாக கொலம்பஸ் தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகள், இந்த ஆண்டு பொறுப்பேற்ற புது நிர்வாகிகளை அனைவருக்கும் அறிமுகம் செய்து வைத்த பின்னர் 2021 ஆம் ஆண்டு நிகழ்நிலையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.




நிகழ்ச்சியை ஒருங்கிணைந்து நடத்திய கொலம்பஸ் தமிழ்ச்சங்கத்தின் புது நிர்வாகிகள் இந்த சுற்றுலா நிகழ்ச்சிக்கு நம் கொலம்பஸ் மக்கள் அனைவரும் தந்த வரவேற்பு மகிழ்ச்சி அளிப்பதாகவும், மேலும் இது போல பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கு இது தூண்டுகோலாக இருப்பதாகவும் தெரிவித்தது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. அடுத்த நிகழ்ச்சியை எதிர்பார்த்து காத்திருப்போம்.

## **<u>‘வே’ என்ற ஒற்றைத் தமிழெழுத்து</u>**

‘வே’ என்ற ஒற்றைத் தமிழெழுத்து அல்லது தமிழ்ச் சொல்லிற்கு ‘மறை’ (மறைத்து வைத்தல்) என்பது பொருளாகும். தாவரங்களின் வேரானது, மண்ணுக்குள் ஓடி மறைந்து கிடப்பதாலேயே அது ‘வே’ர் எனப்பட்டது.



மறைந்திருந்து தாக்குவதாலேயே அவன் ‘வே’டன் எனப்பட்டான். வேட்டையும் அப்படித்தான். சுற்றிலுமிட்டு மறைத்துப் பாதுகாப்பதாலேயே ‘வே’லி எனப்பட்டது. வேய்தலும் அப்படித்தான்.

சுடுநீரில் மூலிகைகளையிட்டு, அடர்த்துணி கொண்டு நம்மை மூடிமறைத்து, அதனை முகர்ந்து நோய் போக்கும் நிகழ்வு ‘வே’து பிடித்தல் எனப்பட்டது.

‘வே’ய்ங்குழல் எனச் சங்க இலக்கியங்கள் போற்றும் பெண்ணின் அடர்க்கூந்தல், அப்படியே அவளது முழுவுடலையும் கவிழ்ந்து மறைக்கக் கூடியதாகையால் அவ்வாறு கூறப்பட்டது.

நம்முடலின் பாகங்களையும், மானத்தையும் மறைத்துக் காப்பாற்றுவதாலேயே அவ்வுடை ‘வே’ட்டி எனப்பட்டது.

கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு மறைவாக, விரைவாக செல்வதால் ‘வே’கம் எனப்படுகிறது.

உண்மைத்தன்மை தெரியாமல் இருப்பதாலேயே அது ‘வே’டம்.

கசப்பு வெளியே தெரியாமல் உள்ளே மறைவாக இருப்பதால் அது ‘வே’ம்பு.

வேதத்தைக் கூட "மறை" என்று தான் தனித் தமிழில் கூறுகிறோம்.

தமிழைக் கொண்டாடுவோம்! வாழ்க தமிழ்!



## வெங்காயமும் தர்பூசணியும்

துருக்கி நாட்டுப்புறக் கதை ஒன்று 'வெங்காயம் ஏன் சிறியதாக இருக் கிறது?', 'தர்பூசணி ஏன் பருமனாக இருக்கிறது?' என்பதற்கு பதில் சொல்கிறது. 'இதற்கெல்லாம் கூட கதைகள் இருக்குமா?' என யோசிக்க வைக்கிறது இக்கதை.

முன்னொரு காலத்தில் வெங்காயம்தான் மிகப் பருமனாக இருந்தது. சோம்பேறியாகவும் தூங்குமூஞ்சியாகவும் இருந்த வெங்காயத்துக்கு, வம்பு பேசுவதைத் தவிர எதிலும் விருப்பம் இல்லை. இதற்கு மாறாக, தர்பூசணி சிறியதாக எலுமிச்சை அளவில் இருந்தது. நாள் முழுவதும் சுறுசுறுப்பாகத் தாவிக் குதித்துக் கொண்டு உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தது. இந்த இரண்டும் ஒரே தோட்டத்தில் இருந்தன.

அங்கே ஒரு வாழைமரம் இருந்தது. அந்த மரத்தை வெங்காயத்துக்குப் பிடிக்கவே பிடிக்காது. வாழையும் அதன் பிள்ளைகளும் இருக்கிற தண்ணீரைக் குடித்துவிடுகிறார்கள் என்று ஆத்திரமே, அதற்கான காரணம். எப்போதும் வாழை மரத்தைக் குற்றம் சொல்லிக் கொண்டே இருந்தது வெங்காயம். இதற்கு மாற்றாக தர்பூசணிப் பழம் வாழை மரத்தைப் பாராட்டிக்கொண்டே இருந்தது.



ஒரு நாள் வாழைமரம் வெங்காயத்திடம் கேட்டது: "நீ ஏன் இப்படி உடம்பை வளர்த்துக் கொண்டு வீணாக இருக்கிறாய்? உன்னால் யாருக்கு என்ன பிரயோஜனம்?"

அதைக்கேட்ட வெங்காயம் சொன்னது: "நீ மற்றவர்களுக்குப் பிரயோ ஜனமாக இருக்கிறாய், அதற்காக உன்னை வெட்டாமல் விடுகிறார்களா? மனிதர்கள் உன் காய்களைப் பறித்துக் கொள்கிறார்கள். இலையை அறுத்துக் கொண்டு போகிறார்கள்.



பழங்களைத் தின்கிறார்கள். முடிவில் ஒருநாள் உன்னையே வெட்டிவிடுகிறார்கள். நல்லது செய்தால் ஒரு பயனும் இல்லை என்பதை உன்னிடம் இருந்தே கற்றுக் கொண்டேன்."

அதைக் கேட்ட வாழைமரம் சொன்னது: "அப்படிச் சொல்லாதே. இருப்பதை எல்லாம் அள்ளிக் கொடுப்பது சந்தோஷமானது. அதை அனுபவித்துப் பார் தெரியும்!"

"பொய். நீ ஒரு முட்டாள். ஏமாளி. வெட்ட வருபவனை உன்னால் எதிர்க்கவோ, தடுக்கவோ முடியாது. தைரியமற்ற கோழை!" என்றது வெங்காயம்.

"அதெல்லாமில்லை. தைரியம் என்பது சண்டைப்போடுவது இல்லை. வேதனையைத் தாங்கி நிற்பதே உண்மையான தைரியம்"

என்று வாழைமரம் மறுபடியும் சொல்ல, அதைக் கேட்ட தர்பூசணி சொன்னது:

“வாழைமரம் சொல்வது உண்மை தான். தன்னைக் கஷ்டப்படுத்துகிறார்களே என்று வாழை ஒருபோதும் மனிதர்களுக்குக் கசப்பான பழத்தைத் தருவதில்லை. சொல்லாலும் செயலாலும் அடுத்தவரை இம்சிக்காமல் வாழ்வது சிரமம். இந்த வாழைமரம் துறவியைப் போல வாழ்கிறது’’ என்றது.

இதை கேட்ட வெங்காயம் எரிச்சலான குரலில் சொன்னது: “இதெல்லாம் வெறும் நடிப்பு. சுயநலம். நான் நம்ப மாட்டேன்!”



அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, அங்கே தோட்டக்காரன் வேலைக்கு வந்தான். அவனிடம் சென்று வெங்காயம் கண்ணீர் சிந்தியபடியே சொன்னது: “இந்த வாழைமரம் சுத்த மோசம். அதுவே எல்லாத் தண்ணீரையும் குடித்துவிடுகிறது. முதலில் இங்கிருந்து அதை வெட்டி எறி”என்றது.

இதைக் கேட்ட தர்பூசணி: “அய்யோ! வெட்ட வேண்டாம்” என்றது.

தோட்டக்காரன் வெங்காயத்தின் பேச்சைக் கேட்டு, வாழைமரத்தை வெட்டிப்போட்டான். துண்டாகி விழுந்த வாழைமரம் வெங்காயத்தைப் பார்த்து சாபமிட்டது: “வாழ்க்கையின் அர்த்தத்தை நீ உணரவில்லை. அதனால் மெலிந்து சுருங்கிப் போவாய். உண்ணும் பொருளாகி, நீயும் என்னைப் போல துண்டு துண்டாக்கப்படுவாய். உன்னால் கண்ணீர் வடிப்பவர்கள் தினமும் உன்னைத் திட்டுவார்கள்!”

வாழை மரத்தின் நிலையைக் கண்டு தர்பூசணி வருந்தியது. அதைக் கண்ட வாழைமரம் சொன்னது: “மனதில் நல்லதை நினைத்து, நல்லதைப் பாராட்டும் தர்பூசணியே... நீ உடல் பெருத்து, எப்போதும் கருணை ஈரத்துடன் மகிழ்ச்சியாக வாழ்வாய்!”

அன்று முதலே வெங்காயம் சுருங்கி சிறியதாகிவிட்டது. தர்பூசணி பருமனாகிப் பலராலும் விரும்பப்படுகிறதாம்.

**-படித்ததில் பிடித்தது**



# விடைகள்

**வார்த்தையோடு விளையாடு:** *(பக்கம்7)*

| வார்த்தை | விடை | வார்த்தை | விடை |
|---|---|---|---|
| 1. க்கம்கல்ழலைபக | பல்கலைக்கழகம் | 2. ம்பமரபத | பரமபதம் |
| 3. ள்ணுகுதுக் | துணுக்குகள் | 4. தயகாசிரிரி | காரியதரிசி |
| 5. டுயமைப்தத்கபதுல் | மையகப்படுத்துதல் | 6. த்போததொர்டுல் | போர்தொடுத்தல் |
| 7. ட்குருபோம்டாக்கு | குருட்டாம்போக்கு | 8. க்ம்ஆவுகூடய் | ஆய்வுக்கூடம் |
| 9. வாம்சியததே | தேசியவாதம் | 10. வயாம்யத்திசிஅ | அத்தியாவசியம் |

**விடுகதைகள்:** *(பக்கம்17)*

| | விடுகதை | விடை |
|---|---|---|
| 1. | அச்சு இல்லாத சக்கரம்; அழகு காட்டும் சக்கரம். அது என்ன? | வளையல் |
| 2. | வெயிலில் மலரும்; காற்றில் உலரும். அது என்ன? | வியர்வை |
| 3. | எவ்வளவு முயன்றாலும் கடிக்க முடியாது; ஆனால் இது இல்லாமல் உணவே இல்லை. இது என்ன? | தண்ணீர் |
| 4. | தலை இல்லாதவன்; தலையை சுமப்பவன். அவன் யார்? | தலையணை |
| 5. | ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம். அது என்ன? | உள்ளங்கை, விரல்கள் |


THANK YOU



AllStates CPA
The power to make a difference, the people to make it count.
www.AllStatesCPA.com


Red1Realty
Make your dream home come true!


Hutta&Cook
ORTHODONTICS
Dublin | Worthington
www.huttasmiles.com


NATIYALAYAM DANCE SCHOOL
SUNEETHA RAVINDRAN
614 209 7846


NELLAI MARTS
GLOBAL CLASS INDIAN GROCERY




With Best Compliments from
TRABUE GARAGE
AUTOMOTIVE SERVICE
Oil Change
Mount & Balance
Engine
Suspension
Tires
Transmission
Brakes
Detailing


GUPTA & ASSOCIATES, CPA, LLC
CERTIFIED PUBLIC ACCOUNTANTS
"YOUR GROWTH IS OUR SUCCESS"
614-344-4246


IntelliX Software, Inc.
Delivering Real Solutions, On Time, On Budget


Ras Pro Sound and Vision
Birthday Parties
Weddings
Receptions
Private Parties
Corporate Events
614 849 2931

## தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு



**தனசீலன் காளிமுத்து,**

**தலைவர்**



**மதிவதனி சாந்தி- ஈஸ்வரன்,**

**செயலாளர்**



**அன்னலக்ஷ்மி தேவசுந்தரம்,**

**பொருளாளர்**



**ஜெகதீஸ்வரன் கணேசன்,**

**மக்கள்தொடர்பு ஒருங்கிணைப்பாளர்**



**லாவண்யா ராமு,**

**நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்**



**சிவசங்கரி கணேஷ்,**

**போட்டி ஒருங்கிணைப்பாளர்**



**காயத்ரி தேவி முத்து,**

**தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளர்**



**பழனிவேல் குப்புசாமி,**

**விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்**



**வினோத்ராஜ் சுந்தரம் பாபு,**

**தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்**

## சாரல் ஆசிரியர் குழு



சிவக்குமார் ராஜு



ஜெகதீஸ்வரன் கணேசன்



மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்



பத்மா முத்துகுமார்



பாலாஜி சிவக்குமார்



வினோத் ராஜ் சுந்தரம் பாபு



ஷைனி அஜி வேலுசாமி



மோகனப்ரியா



சத்தியமூர்த்தி தங்கராசு



ரம்யா சிவசுப்ரமணியன்



ஜானு இசக்கிராஜ்மோகன்

## வடிவமைத்தோர் குழு



சிவசங்கரி கணேஷ்



லாவண்யா ராமு



காயத்ரி தேவி முத்து

## <u>சரிபார்த்தோர் குழு</u>



***பழனிவேல் குப்புசாமி***



***ரம்யா***



***சிவா ராமசுவாமி***

E2 INFOSYSTEMS

# நன்றி

விரைவில் குளிர்கால இதழில்

உங்கள் மனம் கவரும் தகவல்கள்

மற்றும் இலையுதிர் கால

புகைப்படங்களுடன் சந்திக்கிறோம்.